செ.வெ.எண்:04 நாள்:02.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அறிவிக்கப்பட்ட 03.08.2021 மற்றும் 04.08.2021 தேதிகளுக்கு பதிலாக 11.08.2021 மற்றும் 12.08.2021 ஆகிய இரண்டு நாட்களுக்கு குடிநீர் நிறுத்தம்**

********

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் பிரதான நீரேற்றும் குழாய் செல்லும் பாதையினை மாற்றியமைக்கும் பணி **NH 45C-**ன் சாலை விரிவாக்கம் பணி நடைபெறவுள்ளதால் எதிர்வரும் 03.08.2021 முதல் 04.08.2021 ஆகிய இரண்டு நாட்களுக்கு குடிநீர் விநியோகம் தடைசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. தற்பொழுது ஆடிப்பெருக்கு திருவிழா மற்றும் நிர்வாக காரணங்களால் மேற்கண்ட 03.08.2021 முதல் 04.08.2021 ஆகிய தேதிகளுக்கு பதிலாக 11.08.2021 புதன்கிழமை மற்றும் 12.08.2021 வியாழக்கிழமை ஆகிய இரண்டு தேதிகளுக்கும் கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு, நாகப்பட்டினம், திருமருகல் ஆகிய ஒன்றிய பகுதிகளுக்கும், நாகப்பட்டினம் நகராட்சி, வேளாங்கண்ணி பேரூராட்சி மற்றும் கீழ்வேளூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**